**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 236/மா/2024**

**நாள் 09.12.2024**

திருவாளர்கள் M.ஜாகிர் உசேன், ................ மனுதாரர்கள்
மற்றும் ர.சாஜித் பாஷா,
சென்னை–600 030.

மண்டல அலுவலர், ............... எதிர்மனுதாரர்
மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை, செனாய் நகர், புனித ஜார்ஜ் கான்வெண்ட் தெரு, எண்.24, பழைய எண்.4/1 என்ற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் M.ஜாகிர் உசேன் மற்றும் ர.சாஜித் பாஷா ஆகியோரின் 04.07.2024 நாளிட்ட மனு 05.07.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 236/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவாளர்கள் M.ஜாகிர் உசேன் மற்றும் ர.சாஜித் பாஷா ஆகியோர் தங்களுடைய மனுவில் சென்னை, அமைந்தகரை ஜெ.டி.துரைராஜ் நகர், 9வது தெரு, க.எண்.27/6–ல் அமைந்துள்ள, 15 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும், மூன்று மாடி கட்டிடம் தொடர்பாக பெருநகர் சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன் மண்டல அலுவலரிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் அக்கட்டிடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா, அதன் சொத்துவரி ரசீதுகளின் நகல்கள் போன்றவைகளை கோரியிருந்தோம் என்றும், அதற்கு அக்கட்டிடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், சொத்துவரி குறித்து மூன்றாம் நபர் தகவல் என்பதால் அளிக்க மறுத்து விட்டதாக குறிப்பிட்டு, தாங்கள் குறிப்பிட்டுள்ள கட்டிட உரிமையாளரின் மூன்று மாடிகள் கொண்ட கட்டிடத்திற்கு "கட்டிட அனுமதி பெற்றுயிருக்கிறது" என்பது சந்தேகம் அளிப்பதாகவும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் செயற்பொறியாளரின் பதில் சந்தேகம் அளிப்பதாகவும், எனவே தங்கள் மனுவினை விசாரணைக்கு ஏற்று பெருநகர சென்னை மாநகராட்சி செயற்பொறியாளருக்கு அக்கட்டிடத்தின் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு உத்திரவிடுமாறும்

அவ்வாறு இல்லாத பட்சத்தில் கட்டிட உரிமையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2) மேற்கண்ட மனுதாரர்களின் புகாரினை ஆய்வு செய்ததில், தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் தகவல் கோரியதால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் பொது தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர், மனுதாரர்கள் கோரியுள்ள தகவல் மூன்றாம் நபர் தகவல்களாக இருப்பதால் சம்பந்தப்பட்ட நபர் ஒப்புதல் இல்லாமல் வழங்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ல் வழிவகை இல்லையென்று தெரிவித்துள்ளார்.

3) எனவே மேற்கண்ட சூழ்நிலையில் மனுதாரர் கோரிய தகவல், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் வழங்க மறுக்கும் பட்சத்தில், அச்சட்டத்தில் மேல்முறையீடு செய்யவும், தகவல் ஆணையத்திற்கு மனு அளிக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களின் மனு மீது இம்முறைமன்ற நடுவம் நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருவாளர்கள் M.ஜாகிர் உசேன் மற்றும்
ர. சாஜித் பாஷா,
எண்.24, பழைய எண். 4/1, புனித ஜார்ஜ் கான்வெண்ட் தெரு,
செனாய் நகர்,
சென்னை–600 030.

2) மண்டல அலுவலர்,
மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
36, B, புல்லா நிழற்சாலை,
செனாய் நகர்,
சென்னை–600 030.

<u>நகல்</u> :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).